கவிதை

கடவுள்

கடவுள் எனக்கு பரிச்சயிக்கப்பட்டார்
ஒரு கையில் வேலுடனோ அல்லது
கொடிய ஆயுதங்களுடனோ
காலடியில், கையில், கழுத்தில் அல்லது
பக்கத்தில் ஏதோ ஒரு விலங்கினூடே

கடவுள் எனக்கு பரிச்சயமானார்
ஏதோ செய்யாத குற்றத்திற்காக
மரச்சட்டங்களில் பிணைக்கப்பட்டு

கடவுள் எனக்கு பரிச்சயமானார்
சற்றும் புரியாத வாக்கியங்களில்...

இவைகள் தவிர்த்து
நான் என் பிள்ளைகளிடம் கூறும் வகையில்
என்றேனும் உருவம் பெறலாம்
கொடிய ஆயுதங்களிடமிருந்தும்,
விலங்குகளிடமிருந்தும்
மரச்சட்டங்களிலிருந்தும்
விடுதலைபெற்று....
என்றேனும் தோன்றலாம் எனக்கு பிடித்தவகையில்
கடவுள்....

- ரிஷி சேது

அச்சம்

எழுதுகோலைத் துடுப்பாக்கி
எண்ணமெனும் "வெண்பா" ற்கடலில்
வீசிப்பார் நினை "வலையை"
திமிங்கிலம் தப்பினாலும்
அயிரையாவது அகப்படும்!

- மு. கார்த்திக்

நட்பு

அவனும் அவளும்
நட்பின் பரந்த வெளியில்
கைகோர்த்து நடந்தனர்.

ஆண், பெண் பால்நிலைக்கு அப்பால்
உன்னதப் பொருளின் விரிதளத்தில்,
கிண்டலாய், கலகலப்பாய், சண்டைகளாய்
அவ்விருவரின் முன் விரிந்தது உலகம்.

ஆயிரங்கண்கள் அவர்களின் புனிதத்தை
அறியாமல் இழிவாகப் பார்த்தன.
ஆண்,பெண் பிம்பங்களுக்கு அப்பால்
நட்பின் வளர்வைச் சமுதாயம் ஏற்கவில்லை.

ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும்
மோகிக்கும் பாலியல் கண்கொண்டே
பார்த்துப் பழக்கப்பட்ட சமுதாயம்
வேறென்ன செய்யும்?

மீள எண்ணாத சமூக எச்சங்களாக,
அவன் காதல் மனையாளின் கண்ணீரும்,
அவள் வாழ்க்கைத் துணைவனின் சந்தேகமும்
நெய்யிட்ட பெருந்தீயாய் சுவாலை வீசிற்று.

கனத்த மனங்களுடன்...
சுருங்காத உன்னத விரிதளத்தில்
தொடர்ந்தும் நடக்க..

நட்பு என்னும் மானுட உணர்வை
சமுதாயப்பேய் கீறிக் கிழித்து
வேடிக்கை பார்த்தது.

- வல்வை சஹாறா

தமிழுக்கு வாழ்வு வேண்டி

இறைவா! எனக்கின்னும்
பல்லாண்டுயிர் ஈந்தளிப்பாய்! – என்னை
மறையா திங்கு வைத்துத்
தமிழுக்கு வாழ்வளிப்பாய்! – கொடுஞ்
சிறையால் தமிழ்மாந்தர்
படுந்துயர் அறியாயோ? – அட
இறைவா! எனக்குயிர்
தந்தால் சிறை உடையாதோ?
நோயால் எனையுருக்கி
எலும்பாக மாற்றிவிட்டாய்! – இந்த
வாயால் ஓய்விலாது
குருதி வரவும் செய்தாய்! – உன்றன்
சேயாம் தமிழ்க்குலத்தின்
துயர் களைந்திட்ட பிள்ளை – இன்று
காயாய் இருக்கையிலே
வீழ்ந்து கருகவைப்பாயோ?

உன்னை வணங்கி நின்ற
பாரதியின் பின்னொருவன்– நின்தாள்
தன்னை வணங்குகின்றேன்
அவனைப்போல் பாதியிலே – பாவி
என்னையும் நீ பறித்தால்
தமிழ்ச்சாதி ஏங்கிப்போகும்!– என்றன்
அன்னை வீழ்ந்து துடிப்பாள்
நீ என்னை அழைக்கலாமோ?

உயிரை நீட்டி என்னை
முன்போல் உலவ விடுவாய்!– சூழும்
துயிலை நீக்கி வைப்பாய்!
புதிதோர் துணிவளிப்பாய்! – அஞ்சா
வயிரநெஞ்சில் ஒன்றும்
மலைத்தோளும் ஈந்தருள்வாய்! – இந்தக்
குயிலை வாழ வைப்பாய்!
தமிழ் கூவவேண்டும் ஐயா!

- காசி ஆனந்தன்

வெகுக்கியம்

கரைகளே இல்லாத
ஆறுகளேது
குறைகளே இல்லாத
குடும்பங்களேது

ஏமாற்றம்
தீப்பெட்டி.
அவமானங்கள்
தீக்குச்சிகள்

இவையிரெண்டும்
உரசிக்கொண்டபோதுதான்
பற்றிக்கொண்டு
சுட்டெனைத்தீண்டி.
புடம்போட்டு புடம்போட்டு
எழுப்பியது தன்மானத்தீ

அதில்
வெந்துபோனது சோகம்
சிங்கத்தின் மீசையாய்
சிலிர்த்தெழுந்தது மனம்
கொடிய முட்கள்
நெடிய பயணம்
களைப்புமில்லை
பாதங்களில்
காயங்களுமில்லை

கண்ணில் படவில்லை
வருடங்களும் வயதுகளும்
என்னை இறுகப்பற்றி
வழி நடத்துகிறது
வசந்தங்களை நோக்கி
என் வைராக்கியம்

- இரா பாலகுமார்

ஒன்றைய நாளைப் போல

நேற்றைய நாளைப் போலவே
இன்றும்
மற்ற எல்லா நாட்களும்
மனத்தின் மண்டிப்போன
புதர்களின் செதில்களில்
படிந்திருக்கிறது
இன்றைய நாளின் அவமானங்களும்
நாளையோ
நாளைய மறுநாளோ
திறந்திருக்கலாம்
ஏதேனுமொரு சாளரம்
எனினும்
ஒவ்வொரு முறை
நேரும் அவமானங்களையும்
எச்சில் தொட்டு
அழித்துவிடத் தோன்றும்
சிறுபிள்ளை தனத்தோடு
நகர்கிறது
இந்தக் கணத்திய வாழ்வு

- தாண்டவன்

புழக்கடையில்

அழுக்குச் சட்டைக்காரனை
புறக்கணித்து
அடுத்தச்சீட்டில்
அமர்ந்தேன்.
என்னை தாண்டி
முன்சீட்டில் அமர்ந்தவன்
எந்தக் குறையை
கண்டான் என்னிடம்?

- ராஜ்குமார்

மணமகன் தேவை

பிறப்பிடம் அறியப்படாதவரும் இப்போது செவ்வாயில் வசித்து வருபவரும் ஐந்தடி உயரம் உடையவரும் அண்மையில் அநேக உலகத் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டு பிரபல்யம் ஆனவருமான பெண்ணுக்கு தகுந்த மணமகனை பிரபல தரகர் விம்பிள்டன் கந்தன் தேடுகிறார். மணமகன் வேலை வெட்டி இல்லாதவராயிருத்தல் விரும்பத்தக்கது. செவ்வாயில் குடியேறிய பின் சும்மாயிருக்க வேண்டி வரும். ஏற்கனவே திருமணம் செய்தவராயினும் பறவாயில்லை. மணமகள் ஸ்பொன்சர் செய்வதற்குத் தயாராக உள்ளார். செவ்வாய் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு வழங்கப்படும். இந்த அரிய வாய்ப்பைத் தவற விட விரும்பாதோர் விம்பிள்டன் கந்தன் அவர்களுடன் அல்லது நாசா ஆராய்ச்சி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு : மணமகனுக்கு செவ்வாய் தோசம் இருப்பது அதிகபட்சத் தகுதியாகும்.

இந்த விளம்பரத்தை முதல் முதலில் வெளியிடுவது ஒரு பேப்பர் மாத்திரமே